Original Suit No.349/2020 நாள்: 14.02.2024

**பி.வா.சா.1 நிர்மலா அவர்களின் குறுக்கு விசாரணை**

என் கணவர் இறந்துபோன பாலாமணிக்கு 2, 3 பிரதிவாதிகள் மற்றும் என்னை தவிற வேறு வாரிசுகள் இல்லை. அவர் இறக்கும் வரை எங்களுடன் தான் ஒரே குடும்பமாக வசித்து வந்தார். A1 ஆவணத்தில் உள்ளது என் கணவரின் கையெழுத்து அல்ல. எதிர் வழக்குரை தாக்கல் செய்து உள்ளேன். அதில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். அதில் வழக்கு கடனுறுதி சீட்டில் உள்ளது என் கணவரின் கையெழுத்து அல்ல என்றும் வாதியால் தயார் செய்யப்பட்டது என்றும் சொல்லி இருக்கிறேன். என் கணவரின் சொந்த ஊர் நன்னியூர் புதூர். அவர் GG Exports மற்றும் பைனான்ஸ்ல் கணக்கு எழுதும் வேலை பார்த்தார். என் கணவரின் சம்பளம் ஆரம்பத்தில் இருந்து என்னவென்று எனக்கு தெரியாது. அதன் பிறகு 2008 முதல் அவர் சொந்தமாக வாத்து கறிக்கடை வைத்தார். மேற்படி கடைக்கு தேவையான வாத்துக்களை வாராவாரம் வேறு கடைகளில் வாங்குவோம். நான் 07.01.2002 தேதியில் இருந்து ஆசிரியையாக அரசு பள்ளியில் பணிபுரிகிறேன். தற்போது N. வெங்கடாபுரத்தில் உள்ள அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக வேலை பார்க்கிறேன். நான் அரசு பள்ளி ஆசிரியராக மட்டும் பணிபுரிகிறேன் என்றால் சரிதான். என் கணவர் யார் யாரிடம் பணம் வாங்கினார் என்ற விவரம் தெரியும். அதை அவர் என்னிடம் கூறி இருக்கிறார். என்னிடம் காட்டப்படும் 11.09.2023 தேதியிட்ட கிரைய பத்திரம் என் பெயரில் உள்ளது தான். அது Ex.A8. மேற்படி ஆவணத்தின் கிரைய தொகை ரூ.9,15,000/- என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 04.10.2023 தேதியிட்ட கிரைய பத்திரம் என் பெயரில் உள்ளது தான். அது Ex.A9. மேற்படி ஆவணத்தின்

கிரைய தொகை ரூ.29,90,000/- என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணங்கள் மூலம் கிரையம் பெறுவதற்கு அரசிடம் முன் அனுமதி வாங்கவில்லை. வழக்கிற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டது. அதை படித்துப் பார்த்தேன். அதற்கு பிறகு வாதி என்னை சந்திக்கவில்லை. வேறு யாரும் என்னை சந்திக்கவில்லை. அதை பதிலில் எனது எதிர்வழக்குரையில் சொல்லி இருக்கிறேன். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. என் கணவரை பொருத்து மேற்கண்ட என் தரப்பு 1 முதல் 18 பொய்யாக ஜோடிக்கப்பட்டவை என்பதால் அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மேற்படி ஆவணங்கள் எனக்கு கிடைத்தது. Ex.B2 ஆவணத்தில் வாதியை பற்றி குறிப்பு எதுவும் இல்லை. மேற்படி ஆவணங்களில் வாதி சம்மந்தப்பட்ட குறிப்புகள் எதுவும் இல்லை. Ex.B2 ஆவணத்தில் இந்த வழக்கின் வாதியை பற்றிய குறிப்பு உள்ளது. மேலும் சில பொய் வழக்குகள் என் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தில் வாதியை தவிற வேறு வாதி சம்மந்தப்பட்ட பங்குதாரர்கள் பற்றிய குறிப்பு இருக்கிறதா என்றால் ரமேஷ் என்பவர் பெயர் இருக்கிறது. அவர் தாக்கல் செய்த வழக்கு அ.வ.எண்.280/2020. அது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்படி A1 கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்தை என் கணவர் உடையது அல்ல என நிரூபிக்க இதுவரை நீதிமன்ற நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. தாவா கடனுறுதி சீட்டு தேதிக்கு பின்னிட்டு 10.12.2019 தேதியில் என் கணவர் இறந்துவிட்டார். வாதி நிறுவனத்தில் என் கணவர் எங்கள் திருமணத்திற்கு முன்பு இருந்தே வேலை பார்த்தார். என் கணவரின் வாத்துக் கறிக்கடை வரவு செலவுகளை நான்

நேரடியாக கவனித்தேன். 2007 ல் ஆரம்பித்தார். மாதம் செலவு போக ரூ.70,000/- லாபம் வரும். அது என் கண்காணிப்பில் சேமிப்பில் இருந்தது என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமுலத்தில் கடையின் மொத்த மதிப்பு ரூ.75,000/- என்றால் சரிதான். என் கணவர் இறக்கும் தருவாயில் வாங்கப்பாளையத்தில் ரூ.90,00,000/-ற்கு என் பெயரில் நான்கு மாடி கொண்ட அப்பார்ட்மென்ட் வாங்கப்பட்டது என்றால் இல்லை. 2006 வருடத்தில் புகழூர் தாலுக்கா வேலாயுதம்பாளையத்தில் என் பெயரில் ஒரு வீடு வாங்கப்பட்டது. அதன் விலை 60 லட்சம் என்றால் சரியல்ல.அதன் மதிப்பு 3.50 முதல் 4 லட்சம் வரும். அதற்கு அரசு பணி பணம், என் தாயார் வீட்டில் கொஞ்சம் கொடுத்தார்கள் அதன் பேரில் வாங்கப்பட்டது. மேற்படி  வீட்டை நான் விற்பனை செய்துவிட்டேன். என் கணவர் வாதி சம்மந்தப்பட்ட நிதி நிறுவனங்களில் என் கணவர் வாங்கிய பணத்தை திருப்பிப் கொடுத்தற்கு ரசீதுகள் கொடுத்ததாக முதல் விசாரணை வாக்கு்முலத்தில் சொல்லி இருக்கிறேன். அதில் வாதி சம்மந்தப்பட்ட ரசீதுகளை நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிறேன். என் கணவர் மீது வழக்கு கடனுறுதி சீட்டு பொய்யாக தயார் செய்யப்பட்டது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. நீதிமன்ற நடவடிக்கையும் எடுக்கவில்லை. மற்ற நிதி நிறுவனங்களின் வரவு செலவிற்கும் வழகது வரவு செலவிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. ராஜசேகரன் என்பவர் என் மீது ஒரு வழக்கு தாக்கல் செய்து இருக்கிறார். அவரது நிதி நிறுவனத்தில் இந்த வழக்கின் வாதி ஒரு பங்குதாரரரா என்றால் சரியாக தெரியவில்லை. அந்த வழக்கில் அவர் அபராத வட்டி 50 ஆயிரம் கேட்டதாக சொல்லி இருக்கிறேன். அந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்படி பணம் வாங்கும்

போது வாதியின் பெயர் நிறுவனம் வேம்பு பைனான்ஸ் அச்சிட்ட கடனுறுதி சீட்டில் கையெழுத்து வாங்கினார்கள். வேம்பு பைனான்ஸ்ல் 5 கடனுறுதிசீட்டுகள் என் கணவரிடம் வாங்கினார்கள் என்று நேரடியாக தெரியாது. என் கணவர் அப்போதே அதை என்னிடம் சொன்னார். பல வருடமாக என் கணவர் பைனான்ஸ்ல் வேலை பார்கிறார். ஆனால் அவரிடம் வெற்று புரோ நோட்டில் கையெழுத்து வாங்கியதற்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை. வழக்கு கடனுறுதி சீட்டு எழுதப்பட்ட தேதியில் வாதியிடம் என் கணவர் வழக்கு கடனை பெற்றுக் கொண்டார் என்றும், அதற்காக வழக்கு கடனுறுதி சீட்டை எழுதிக் கொடுததார் என்றும், தற்போது உண்மை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன என் கணவர் வாதியிடம் பெற்ற தாவா கடன் அடிப்படையில் நாங்கள் பலன் அடைந்து இருப்பதால் அதை திருப்பி செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.02.14 17:20:28 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.